முழு பதிப்பரிமையுடையது
All Rights Reserved
සියලු ම හිමිකම් ඇවිරිණි

# மலையக கல்வி அபிவிருத்தி மன்றம்

## அறிவொளி விஷேட புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை - 2023

**தரம் 5**

**MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES - OCTOBER - 2023**

**பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களின் மன உறுதியை மேம்படுத்தவும் பரீட்சையை முழுநம்பிக்கையுடன் எதிர்கொள்ளவும் மலையகக் கல்வி அபிவிருத்தி** மன்றத்தினால் நடத்தப்படும் முன்னோடிப் பரீட்சை - கார்த்திகை - 2023

## வினாத்தாள் - I

**நேரம்: 1 மணித்தியாலம்**

**சுட்டெண்:.....................................**

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:**

- ❊ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ❊ **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ❊ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ❊ ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றிடையே **ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- ❊ செய்கை வேலைக்காக **ஒரு தாள்** வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| விபரம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| பாசீலனை ஒப்பம் | |
|---|---|
| பாட ஆசிரியர் | |
| பகுதித் தலைவர் | |
| அதிபர் | |

**மலையக கல்வி அபிவிருத்தி மன்றம்**
இல. 142,1/1, செட்டியார் தெரு, கொழும்பு 11
தொ.பே.இல. - 011-2424886
Email: arivoliorg@gmail.com Web:www.arivoli.org

ஆக்கம்:
**ஆசிரியர் திரு. ச. உசேந்திரன்**
(B.COM, Bed(hons), NDT)
(புலமை விவேக வினாத்தாள் ஆசிரியர்)
ஹாலி எல தமிழ் மகா வித்தியாலயம் பதுளை


kalvi.lk



01) பின்வரும் உரு பற்றிய சரியான கூற்று யாது?




(1) நான்கு வெசாக் கூடுகளும் மற்றும் ஒரு பூச்சாடியும் காணப்படுகின்றது.

(2) பூரண சந்திரன் தோன்றியுள்ளது.

(3) மூன்று மாணவர்கள் மற்றும் ஐந்து வெசாக் கூடுகளும் காணப்படுகின்றது.

02) பின்வரும் உருவில்  ஐயும்  ஐயும் குறிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் முறையே.





(1) B யும் D யும்

(2) D யும் C யும்


(3) C யும் D யும்

03) ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான இரண்டு பொருட்கள் எவை?



(1) டயர் மற்றும் உரல் (2) மின்சூள் மற்றும் குடை (3) மின்சூள் மற்றும் டயர்

04) பின்வரும் உருக்களில் காட்டப்படும் உருக்களை அவற்றுக்கிடையே உள்ள சிறந்த தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கத்தக்க முறை யாது?




(1) AD யும் BC யும்

(2) AC யும் BD யும்

(3) AB யும் CD யும்

05) பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ள பழ வகைகளில் இரண்டிற்கு மாத்திரம் பொருத்தமான கூற்று எது?



(1) மரத்தில் மற்றும் காய்க்கக் கூடியது

(2) அதிகமான வித்துக்கள் காணப்படும்


(3) மரக்கறிகளாக ஆகாரத்திற்குப் பயன்படுத்துவர்


kalvi.lk

சுட்டெண் : ......................................

புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம்

06) கட்டத்தினுள் உள்ள உருக்களைப் பார்த்து இந்த மூன்று உருத் துண்டுகளையும் ஒன்றுபடச் சேர்த்து அமைக்கக்கூடிய தனி உரு எது?




(1) 
(2) 
(3) 

07) ஆண்டில் சில மாதங்களுக்கு 31 நாட்களும் வேறு சில மாதங்களுக்கு 30 நாட்களும் உள்ளன. அவ்வாறெனின் 28 நாட்கள் உள்ள மாதங்களின் எண்ணிக்கை யாது?

(1) 1    (2) 2    (3) 12

08) ? இடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான உரு யாது?





(1)

(2)


(3)




09) இலையின் கீழ் உருவாகுவேன்
இலையையே உணவாக்குவேன்
உரோமத்தால் தீங்கு செய்வேன்
நிறைவானால் நன்மை செய்வேன்

மேலுள்ள வரிகளினூடாகக் குறிப்பிடப்படுவது.

(1) தும்பி    (2) வண்ணத்துப்பூச்சி    (3) மயிர்க்கொட்டி

10) வெற்றிடம் A இல் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.





(1)

(2)

(3)

புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம்


kalvi.lk

புலமை விவேகம் புலமை விவேகம் புலமை விவேகம்

11) பின்வரும் வாக்கியத்தில் உள்ள இரு வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொற் சோடி யாது?

அறிவிலும் ............................ ஊட்டமளிக்கப்பட்ட ஆரோக்கியமான குழந்தைகளை


பெற்றெடுத்தல் ............................ நோக்கமாகும்.

(1) ஆற்றலிலும் , குழந்தைகளின்

(2) விளையாட்டிலும் , பெற்றோர்களின்

(3) நற்குணங்களிலும் , கல்வியின்

12) கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.




(1) 4

(2) 8


(3) 16

13) உருவிலுள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 12


(2) 10

(3) 8



14) அருகே தரப்பட்டுள்ள உருவினை அவதானிக்கும் போது புலப்படாத ஆங்கில எழுத்து எது?


(1) T (2) H (3) M



15) 50 வினாக்களைக் கொண்டமைந்த நுண்ணறிவு வினாத்தாள் ஒன்றில் சரியாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பிழையாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் மேலதிகமாக 1 புள்ளி கழிக்கப்படும். இதனடிப்படையில் 64 புள்ளிகளைப் பெற்ற ஒருவர் எத்தனை வினாக்களுக்கு சரியாக விடையளித்திருப்பார்.


(1) 32 (2) 36 (3) 38

16) ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.




இலக்கம் 5 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?

(1) 1 (2) 2 (3) 3

17) 



அருகில் நீளம், அகலம், உயரம் ஆகியவை 9cm அளவுகளைக் கொண்ட கனவுருவொன்று காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவில் பக்கம் ஒன்றின் நீளம், அலகம், உயரம் என்பவை 3cm அளவுள்ள எத்தனை சிறிய கனக்குற்றிகளை வெட்டியெடுக்க முடியும்?

(1) 28 (2) 29 (3) 27



kalvi.lk


18) கீழே காட்டப்பட்டுள்ளது தலா மூன்று வீதம் ஒரு ரூபா நாணயங்களும், இரண்டு ரூபா நாணயங்களும், ஐந்து ரூபா நாணயங்களும் அடுக்கி வைக்கப்பட்டுள்ள விதமாகும்.




அவற்றில் ஒரு அடுக்கில் இருந்து ஒரு நாணயமும் இன்னொன்றில் இருந்து இரண்டு நாணயங்களும் மற்றையதில் இருந்து மூன்று நாணயங்களும் எடுத்து பெறக் கூடிய அதிகபட்ச பெறுமதி யாது?

(1) ரூபா 12 (2) ரூபா 17 (3) ரூபா 20


19) ஒரு பாதையில் பயணிக்கும் போது ருவனின் வீட்டிற்கு பின்னர் கமல், சுனில், சமன் ஆகியோர்களின் வீடுகளை சந்திக்கலாம். அவர்களின் வீடுகளுக்கிடையிலான தூரம் கிலோ மீற்றரில் தரப்பட்டுள்ளது.




ருவனின் வீட்டிலிருந்து சமனின் வீட்டிற்கான தூரம் எத்தனை கிலோமீற்றர்?

(1) 16km (2) 10km (3) 12km

● தகவல்களுக்கேற்ப 20, 21 ஆகிய வினாக்களிற்கான விடைகளினைத் தெரிவு செய்க.




✱ வட்டம் A ஆனது வட்டம் B ஐப் போல் இருமடங்காகும்.
✱ வட்டம் B ஆனது வட்டம் C ஐப் போல இருமடங்காகும் எனின்

20) மாறாத வேகத்தில் ஓடும் ஒருவன் A வட்டத்தை ஒரு தடவை சுற்றும் தூரமானது C வட்டத்தை எத்தனை தடவை சுற்றும் தூரத்திற்குச் சமனாகும்.

(1) 4 (2) 8 (3) 2

21) கரிஷ் A வட்டத்தை 2 தடவைகளும், விமல் B வட்டத்தை 3 தடவைகளும், காதர் C வட்டத்தை 4 தடவைகளும் சுற்றி ஓடினர். இதன்படி அதிக தூரம் ஓடியவர் யார்?

(1) காதர் (2) கரிஷ் (3) விமல்

22) ஒரு பாத்திரத்தில் $\frac{3}{4}$ பங்கு தண்ணீர் உள்ளது. அப்பாத்திரத்தினுள் மேலும் 2 லீற்றர் தண்ணீரை ஊற்றியது பாத்திரம் முற்றாகத் தண்ணீரால் நிரம்பியது அப்பாத்திரம் கொள்ளும் நீரின் கனவளவு யாது?

(1) 4 லீற்றர் (2) 6 லீற்றர் (3) 8 லீற்றர்

23) ரமணியின் அக்காவுக்கு ஒரு சகோதரியும், இரண்டு சகோதரர்களும் இருந்தார்கள் எனில் ரமணியின் சகோதர, சகோதரிகள் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 5

24) சமநீளமான இரண்டு கடதாசி அட்டைகள் கீழே தரப்பட்டுள்ளன. இரண்டு கடதாசி அட்டைகளிலும் நிழற்றப்பட்ட பகுதி ஒன்றன் மீது ஒன்று இருக்குமாறு ஒட்டப்பட்டால் கிடைக்கும் கடதாசி அட்டையில் முழு நீளம் யாது?





(1) 35cm

(2) 30cm


(3) 25cm

25) பின்வரும் தொடர்பிற்கமைய அமைந்த உரு யாது?

A - அளவீட்டு கருவிகள் B - நீளத்தை அளவிடும் கருவி C - மில்லிலீற்றர்




26)




ஒருவர் A என்ற இடத்தில் பயணத்தை ஆரம்பித்து B , C , D , E , F , G , H ஊடாக மீண்டும் A வந்தடைந்தார் எனின் அவர் பயணம் செய்த தூரம் யாது?

(1) 146m


(2) 98m

(3) 12m

27) ஐந்து பேர் தோற்றிய பரீட்சையில் சித்திப் புள்ளி 40 ஆகும். குறித்த பரீட்சையில் தோற்றிய ஐந்து பேரும் சித்தி பெற்றனர். அவர்களில் மூன்று பேர் உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இதற்கமைய ஐந்து பேரும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் மிகக் குறைந்த புள்ளியாக இருக்கக் கூடியது.

(1) 200 (2) 203 (3) 205

28) ஆரம்பித்த இடத்திலிருந்து அம்புக்குறி வழியாக பயணம் செய்து மீண்டும் ஆரம்ப இடத்தை அடைவதற்குள் வலது புறமாகவும் இடது புறமாகவும் திரும்பிய தடவைகள் எத்தனை.




(1) வலது 6 , இடது 1

(2) வலது 3 , இடது 4

(3) வலது 2 , இடது 5

புலமை விவேகம்

29) பேருந்து ஒன்று மணித்தியாலத்திற்கு 60km வேகத்தில் பயணித்தால் A நகரிலிருந்து B நகரத்திற்கு செல்வதற்கு 2 மணித்தியாலங்கள் செல்லும் அப் பேருந்து மணித்தியாலத்திற்கு 30km வேகத்தில் பயணிக்குமாயின் A நகரிலிருந்து B நகரிற்குச் செல்வதற்கு எடுக்கும் நேரம்.

(1) 4 மணித்தியாலங்கள் (2) 1 மணித்தியாலங்கள் (3) 3 மணித்தியாலங்கள்


30) பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூலானது 1980ம் ஆண்டும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இது எத்தனையாம் நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தம் என்பதை தெரிவு செய்க.

(1) 20ம் நூற்றாண்டு 9 ஆம் தசாப்தம்

(2) 20ம் நூற்றாண்டு 8 ஆம் தசாப்தம்

(3) 20ம் நூற்றாண்டு 10 ஆம் தசாப்தம்

31) இரண்டு சந்தர்ப்பங்களில் கடிகாரத்தில் முட்கள் அமைந்துள்ள விதம் கடிகார முகத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன்படி இவ் கடிகாரம் குறித்துக் காட்டும் இரண்டு நேரங்களாக இருக்கக் கூடியது.





(1) 4.00 - 8.30

(2) 6.00 - 8.30


(3) 8.30 - 4.30

32) முழு உருவின் பரப்பளவானது நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவின் எத்தனை மடங்கு ஆகும்.

(1) 12 (2) 6 (3) 10



33) கீழ்வரும் படத்தில் A எனும் வட்டத்தில் நசீமும் M எனும் வட்டத்தில் அசீமும் நின்று கொண்டிருந்தனர். உருவில் காட்டப்பட்டுள்ளபடி நசீம் ஒரு வட்டம் முன்னோக்கிப் பாயும் போது அசீம் இரு வட்டங்கள் முன்னோக்கிப் பாய்கின்றான். இருவரும் ஒரே நேரத்தில் பாய ஆரம்பித்தனர் எனின் இருவரும் சந்திப்பது.





(1) G வட்டத்தின் மீது

(2) E வட்டத்தின் மீது

(3) F வட்டத்தின் மீது

34) அமலன் வாசிப்பதற்காக நூல் நிலையத்தில் ஒரு புத்தகத்தை எடுத்தபோது அதில் 13, 16, 17, 72, 73, 100, 101, 102 ஆகிய பக்கங்கள் கிழிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நூலகப் பொறுப்பாளரிடம் தாள்கள் கிழிக்கப்பட்டிருப்பதைக் காட்டினான். அமலன் அப் புத்தகத்தில் எத்தனை தாள்கள் கிழிக்கப்பட்டுள்ளதாக நூலகரிடம் தெரிவித்தான்.

(1) 4 (2) 7 (3) 8

35) 



இரண்டு பற்சில்லுகளும் சுழலும் திசையானது அருகே தரப்பட்டுள்ளது. இவை சுழலும் திசைகளை அம்புக்குறி மூலம் காட்டப்பட்டுள்ள முறையானது.

(1) சரியானது (2) தவறானது (3) கூறமுடியாது



kalvi.lk

புலமை விவேகம்


36) 



1 லீற்றர் நீர் உள்ள பாத்திரத்தில் A,B என்ற இரண்டு துவாரங்கள் உள்ளன. ஒவ்வொரு நிமிடமும் A என்ற துவாரத்தின் ஊடாக 150ml நீரும் B என்ற துவாரத்தின் ஊடாக 100ml நீரும் வெளியேறுகின்றது எனின், பாத்திரம் முழுவதும் வெறுமையாக எடுக்கும் நேரம் யாது?

(1) 10 நிமிடங்கள் (2) 5 நிமிடங்கள் (3) 4 நிமிடங்கள்

37) சூழலானது குப்பைகளை எரிப்பதனால் தொழிற்சாலையில் இருந்து வெளிவரும் புகையால் பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் வாகனங்களில் இருந்து வெளிவரும் புகை என்பவற்றால் மாசடைகிறது.

(1) நீர் மாசடைதல் (2) நிலம் மாசடைதல் (3) வளி மாசடைதல்

38)  = ரூபாய் 280.00

 = ரூபாய் 500.00

6 பென்சில்களினதும் 3 கொப்பிகளினதும் விலை யாது?

(1) ரூபாய் 500.00 (2) ரூபாய் 780.00 (3) ரூபாய் 800.00

- A, B, C ஆகிய மூன்று கூடுகளில் கோழிகள் வளர்க்கப்பட்டன.
  - ✱ மூன்று கூடுகளிலும் சம எண்ணிக்கையான கோழிகள் இல்லை.
  - ✱ கூடு A இல் உள்ள கோழிகளின் எண்ணிக்கையின் அரைவாசி கோழிகள் கூடு B இல் உள்ளன.
  - ✱ கூடு C இல் உள்ள கோழிகளின் எண்ணிக்கையின் நான்கு மடங்கு அதிகமாக கூடு A இல் உள்ளன.
  - ✱ கூடு B இல் 16 கோழிகள் உள்ளன.

39) கூடு C இல் உள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 16 (3) 22

40) இரண்டு எண்களில் முதல் எண் ●○● எனவும் இரண்டாம் எண் ○ⓧ○ எனவும் எழுதப்பட்டன. அவை இரண்டினதும் கூட்டுத்தொகை 535 என்பதோடு முதல் எண் இரண்டாம் எண்ணைக் காட்டிலும் 111 ஆல் கூடியதுமாகும். அதன்படி ⓧ●○ எனக் காட்டப்படும் எண் யாது?

(1) 123 (2) 132 (3) 213

முழு பதிப்புரிமையுடையது
All Rights Reserved
සියලු ම හිමිකම් ඇවිරිණි

# மலையக கல்வி அபிவிருத்தி மன்றம்
# அறிவொளி விஷேட புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை – 2023

தரம் 5

Modal Examination For Grade Five Students For selection to schools and for the award of bursaries - December - 2023

பரீட்சைத்திணைக்களத்தால் நடாத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களின் மன உறுதியை மேம்படுத்தவும் பரீட்சையை முழு நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் மலையகக்கல்வி அபிவிருத்தி மன்றத்தினால் நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை - 2023

## வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்:.............................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளெ இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்பட்ட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
- விடைகளின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

### விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| விபரம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| மொத்தம் | |

| இறுதிப் புள்ளிகள் | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| பரிசீலனை ஒப்பம் | |
|---|---|
| பாட ஆசிரியர் | |
| பகுதித் தலைவர் | |
| அதிபர் | |

**மலையக கல்வி அபிவிருத்தி மன்றம்**
இல. 142,1/1, செட்டியார்தெரு, கொழும்பு -11
Tel: 011-2424886
Email: arivoliorg@gmail.com
Web: www.arivoli.org

ஆக்கம்:
**ஆசிரியர் திரு. ச. உசேந்திரன்**
(B.Com, Bed (hons), NDT)
(புலமை விவேக வினாத்தாள் ஆசிரியர்)
ஹாலி எல தமிழ் மகா வித்தியாலயம் - பதுளை
(தேசிய பாடசாலை)



kalvi.lk

1) **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

வனங்கள் வனப்பு மிக்கவை, உயர்ந்த மரங்களும் அடர்ந்த புதர்களும் அங்கு காணப்படும். பறவைகள் கானமிசைத்தபடி பறந்துவரும். அருவிகள் சலசலத்து ஓடும். மான்களும் எருமைகளும் நீரருந்துவதற்காக அருவிக் கரைக்கு வரும். தெளித்துவிட்ட வண்ணக் கலவை போலப் பூவினங்கள் காட்சி தரும். இது இயற்கை அன்னை நமக்களித்த கண்கவர் காட்சியாகும். வனத்தினுள் நுழைபவரைக் குளிர்காற்று வருடிச் செல்லும். அந்த வருடலோடு நாமும் வனத்தை ரசிக்க முடியும்.

- பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(I) கானமிசைப்பவை எவை? ..........................................................................................................

(ii) மான்களும் எருமைகளும் அருவிக் கரைக்கு வரக் காரணம் யாது?

..................................................................

(iii) பூவினங்கள் எதைப் போலக் காட்சி தரும்? ..................................................................................

(iv) "அழகு" என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. ..........................................................

(v) இங்கு தாயாகக் குறிப்பிடப்படுவது எது? ..........................................................................

(vi) வனத்தினுள் நுழைபவரை வருடிச் செல்வது யாது? ..................................................................

(2) அஃறிணைப் படர்க்கை ஒருமைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) அதிபர் (2) மேசை (3) மரங்கள்

(3) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "×" எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(1) எமக்கு கல்வியும் ஒழுக்கமும் இரு கண்கள் போன்றது. ( )

(2) மரத்தினது இலைகள் கீழே விழுந்தன. ( )

(3) நானும் அம்மாவும் தினமும் கோயிலுக்குச் செல்கின்றோம். ( )

(4) கட்டத்தினுள் இணைமொழிகளில் மிகப்பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

| குப்பை கூளங்களை, பேரும் புகழும், குன்றும் குழியுமாக, அங்குமிங்கும் |
|---|

(1) வீதிகள் எங்கும் குப்பைகள் .................................................... பரந்து காணப்பட்டன.

(2) நாம் .................................................. சேர்த்துக் கூட்டெரு தயாரித்தோம்.

(5) பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரும் வெளிப்படுத்தும் கருத்தைக் கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.

(1) பூசி மெழுகுதல் ......................................................................

(2) வாகை சூடுதல் ..........................................................................

| நிறைவடைதல் / குற்றத்தை மறைக்கப் பார்த்தல் / வெற்றியடைதல் / எதிர்த்துப் பேசுதல் |
|---|

(6) பின்வரும் கருத்தைக் குறிக்கும் பழமொழியை எழுதுக.

இளமைப் பருவத்தில் துணிவு அதிகம்

..........................................................................................................................................

சுட்டெண்:....................................

(7) பின்வரும் வாக்கியத்தின் பிழைகளை திருத்தி நிகழ்கால வினைச்சொல் சேர்த்து எழுதுக.
நாங்க தேத்தன்னி குடிச்சோம். ....................................................

(8) (1) கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.
**செயலைச் / வேண்டும் / உரிய / நேரத்தில் / உரிய / செய்து / முடிக்க**

..........................................................................................................................................

(2) பெண்பாற்சொல்லை எழுதுக. பேரன் - ....................................................

(9) (1) பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.
ஆகா எவ்வளவு பெரிய நீர்வீழ்ச்சி


(2) எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. நண்பன் - ..............................................


(10) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) சீகிரியா ஓவியங்கள் .................................................. (பழமை / பழைமை) வாய்ந்தன.

(2) அம்மா உணவு சமைப்பதற்கு ................................... (எண்ணெய் / எண்ணை) பயன்படுத்தினா்.

(11) ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்ட கட்டங்களுக்குள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





(12) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(1) I / to / cut / vegetables / you / help - ..........................................................................................

(2) am / water / I / drinking - ...................................................................................................

(13) ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.


(1) Right - ................................ (2) Happy - ................................

(14) යහළුවා - யஹலுவா என்ற சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.......................................................

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.
உங்கள் எண் எத்தனை? ...........................................

(16) (1) 3148 + 2165 இன் விடையை இவ்வெண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.




(2) இடப்பெறுமானத்திற்கேற்ப விரித்தெழுதுக.

4031 = .......... + ............ + ............+ ............

சுட்டெண்:....................................

(17) (1) பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

40250, 31600, 32600, 32599, 32500 ..........................................................................................

(2) 4 3 8 என்னும் எண் அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க ஆறு எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

....................... ....................... ....................... ....................... ....................... .......................

(18) பழமரத் தோட்டத்தில் பறிக்கப்பட்ட பழங்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | மாம்பழம் | கொய்யாப் பழம் |
|---|---|---|
| முதலாவது தடவை | 2457 | 1456 |
| இரண்டாவது தடவை | 1894 | 930 |

(1) இரண்டு தடவைகளிலும் பறிக்கப்பட்ட மொத்தப் பழங்களின் எண்ணிக்கை யாது?

..........................................

(2) இரண்டு தடவைகளிலும் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வேறுபாடு யாது?

..........................................

(19) திரைப்படம் ஒன்றினது முதலாவது திரைக்காட்சி மு.ப. 10.30 இற்கு ஆரம்பமாகி பி.ப. 1.00 இற்கு முடிவடைந்தது.


(1) திரைப்படம் முதல் காட்சிக்குச் செலவிடப்பட்ட நேரம் எவ்வளவு?

..........................................................................................

(2) நிறைவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியால கடிகாரத்தில் கூறப்படும் விதத்தில் எழுதுக.

..........................................................................................

(20) (1) பின்வரும் உருவில் $\frac{2}{5}$ ஐ பென்சிலால் நிழற்றுக.



(2) நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக. ........................................

(21) அடுத்துவரும் எண்களை தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

(1) 1725, 1625, 1535, 1455, ............................

(2) 7020, 7040, 7060, 7080, ............................

(22) A,B, C, D எனும் மூன்று நகரங்களின் அமைவு படத்தில் காட்டப்பட்டுள்ளது, A இற்கும் C இற்கும் இடையிலான தூரம் 300km ஆகும். B இற்கும் D இற்கும் இடையிலான தூரம் 310 km ஆகும். A இற்கும் D இற்கும் இடையிலான தூரம் 425 km ஆகும். B இற்கும் C இற்கும் இடையிலான தூரம் எவ்வளவு?




....................................


(23) பை ஒன்றில் 4kg 50g அரிசி இருந்தது. அதற்குள் மேலும் 1Kg 850g அரிசி இடப்பட்டது. இப்போது பையிலுள்ள அரிசியின் மொத்த நிறை யாது?

.................... Kg .................... g



kalvi.lk

(24) இரு பாத்திரங்களிலும் உள்ள பானங்களை வெளியில் சிந்தாமல் 6 லீற்றர் பாத்திரத்தில் கவனமாக ஊற்றும் போது மீதமாக உள்ள பானத்தின் அளவு யாது?




....................................


(25) (1) 480 மாம்பழங்களை ஒரு பையில் 5 பழங்கள் வீதம் இடுவதற்கு தேவையான பைகள் எத்தனை?

........................................

(2) ஒரு பெட்டியில் 8 பென்சில்கள் வீதம் உள்ளன. இவ்வாறான 120 பெட்டிகளில் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை யாது?

............................................

(26) (1) உருவில் காணப்படும் சமச்சீர்க்கோடுகள் எத்தனை?



............................................

(2) ஒரு தளத்தின் கிடையியல்பை இனங்காண்பதற்கு பயன்படுத்துவது ............................................

(27) (1) யன்னல்களுக்குத் திரைச்சீலை இடுவதற்காக 12m நீளமான திரைச்சீலைத்துணி தேவைப்படுகிறது. தற்போது கைவசம் 5m 50cm நீளமான துணி உள்ளது. மேலும் தேவையான திரைச்சீலைத் துணியின் நீளம் யாது?

................. m ............... cm


(2) தரப்பட்டுள்ள எண்ணை எழுத்தில் எழுதுக. 46715

..............................................................................................................................................

(28) பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | 1kg இன் விலை | | அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| வெங்காயம் | 290 | 00 | 2500g | I) .......... | .......... |
| மிளகாய் | ii) ........ | ........ | 600g | 372 | 00 |
| தக்காளி | 724 | 00 | 250g | iii) ........ | .......... |
| மொத்தம் | | | | iv) ........ | .......... |

(29) ஒரு மணித்தியாலத்தில் பழக்கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட பழங்கள் பற்றிய தகவல்கள் கீழேயுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது.




(1) பழக்கடையில் அதிகளவில் விற்பனை செய்யப் பட்ட பழம் எது?

..........................................

(2) பழக்கடையில் விற்கப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) வெந்நீர்க் கேத்தல் புரண்டு எரிகாயம் ஏற்பட்டால் செய்யத்தகாதது.
  (1) களிம்புகள் பூசுதல்.
  (2) எரிகாயம் ஏற்பட்ட இடத்தில் வழிந்து செல்லுமாறு தண்ணீரை ஊற்றுதல்.
  (3) விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல்.

(31) கிராமிய விளையாட்டுக்களை மாத்திரம் உள்ளடக்கிய விடை.
  (1) பசுவும் புலியும், பல்லாங்குழி (2) கரப்பந்து, கிட்டிப்புள் (3) கிளித்தட்டு, துடுப்பாட்டம்

(32) கலாவெவயைக் கட்டுவித்த மன்னன்
  (1) மகாசேனன் (2) தாதுசேனன் (3) பராக்கிரமபாகு


(33) நீரிழிவு நோய் ஏற்படப் பிரதான காரணம் எது?
  (1) இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகள் என்பவற்றை அதிகம் உண்ணுதல்.
  (2) குறித்த வேளையில் உணவு உண்ணாதிருத்தல்.
  (3) உடன் உணவுகள், எண்ணெய் அதிகம் அடங்கியுள்ள உணவுகளை அடிக்கடி உண்ணுதல்.

(34) கைக்குட்டையில் பூவைத் தைக்கும் போது பூவின் காம்பைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை யாது?
  (1) நரம்புத் தையல் (2) சங்கிலித் தையல் (3) கம்பளித் தையல்

(35) பெரிய நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டின் அடிப்பகுதி அகலம் கூடியதாகவும் மேற்பகுதி அகலம் குறைவாகவும் அமைக்கப்படுவதற்கான காரணம் யாது?
  (1) நீர்த்தேக்கத்தின் அடிப்பகுதியில் அமுக்கம் குறைவாக இருக்கின்றமை.
  (2) நீர்த்தேக்கத்தின் அடிப்பகுதியில் அமுக்கம் உயர்வாக இருக்கின்றமை.
  (3) நீர்த்தேக்கத்தின் அடிப்பகுதியிலும் மேற்பகுதியிலும் அமுக்கம் சமமாக இருக்கின்றமை.

(36) நுளம்பு, இலையான், நோய்காவி ஆட்கள் அதிகளவான எண்ணெய் சத்துள்ள உணவுகளை உண்பதால் ஏற்படும் நோய்கள் முறையே,
  (1) மலேரியா, கழிச்சல், சின்னமுத்து, நீரிழிவு.
  (2) யானைக்கால், கழிச்சல், கொப்பளிப்பான், உயர்குருதியமுக்கம்
  (3) டெங்கு, கொள்ளைநோய், கொரோனா, இரப்பையழற்சி

(37) படங்களில் தரப்பட்டுள்ள பாசிப்பயறு வித்துக்கள் அடங்கிய பாத்திரங்களை சில நாட்களின் பின்னர் அவதானிக்கும் போது எந்தப் பாத்திரத்தில் உள்ள பாசிப்பயறு வித்து முளைக்காதிருப்பதனைக் காணலாம்.




(38) இலங்கைக்கே உரித்தான முலையூட்டி அல்லாதது,
  (1) கருங்குரங்கு (2) மரநாய் (கலவத்தன்) (3) கொம்பு ஓணான்

(39) பின்வருவனவற்றுள் எதனால் சூழல் அதிகமாக மாசடைகிறது,
  (1) ஞாயிற்றுக்கலங்கள் மூலம் மின்சக்தி பெறும் போது.
  (2) மாட்டுவண்டி, துவிச்சக்கரவண்டி என்பவற்றைப் பயன்படுத்தும் போது
  (3) நிலக்கரி மூலம் அனல் மின்சக்தி நிலையம் இயங்கும் போது



kalvi.lk

(40) "பச்ச வளையல் தொட்டு ஏலேலோ மயில் ஏலேலோ
பயிரறுக்கப் போற பெண்ணே ஏலேலோ மயில் ஏலேலோ" என்ற பாடல்

(1) மீனவர் பாடல் (2) வண்டிப் பாடல் (3) அரிவி வெட்டுப் பாடல்

(41) அரச இலச்சினையில் நிறைகுடம், நெற்கதிர் என்பன குறித்துக் காட்டுபவை முறையே.

(1) தன்னிறைவும் செழிப்பும், சௌபாக்கியமும் பொலிவும்.
(2) சௌபாக்கியமும் பொலிவும், தன்னிறைவும் செழிப்பும்.
(3) சௌபாக்கியமும் பொலிவும், நித்திய நிலைத்திருப்பு.

(42) 


இலங்கைத் தேசப்படத்தில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள மாகாணத்தையும் அம்மாகாணத்திற்குரிய பிரதான நகரத்தையும் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) மத்திய மாகாணம், கண்டி நகரம்
(2) தென் மாகாணம், காலி நகரம்
(3) ஊவா மாகாணம், மொனறாகலை நகரம்

(43) நீரூற்றுக்களை பாதுகாப்பதில் கூடிய செல்வாக்குச் செலுத்தும் மரம் எது?

(1) நாகமரம் (2) மருதமரம் (3) அரசமரம்

(44) A,B,C ஆகிய மூன்று மின்குமிழ்கள் இரண்டு உலர்மின்கலங்களில் பொருத்தப்பட்டுள்ளன. இவ் அமைப்பின்படி ஒளிருவது,




(1) மின்குமிழ் A மாத்திரம்
(2) மின்குமிழ் A யும் B யும் மாத்திரம்
(3) மின்குமிழ் A,B,C, ஆகிய மூன்றும்

(45) இச் செயற்பாடு காந்தத்தின் எந்த இயல்பைக் காட்டுகின்றது.



(1) தள்ளும் இயல்பு
(2) சுற்றும் இயல்பு
(3) கவரும் இயல்பு

(46) உடைந்த கண்ணாடித் துண்டுகள், கடதாசிக் கழிவுகள், இலைகள் என்பவற்றை இடுவதற்குப் பொருத்தமான கழிவு நிறத் தொட்டிகளின் நிறங்கள் முறையே,

(1) சிவப்பு, செம்மஞ்சள், பச்சை (2) சிவப்பு, பச்சை, நீலம் (3) சிவப்பு, நீலம், பச்சை

(47) தேசிய மரபுரிமையாகவும் உலக மரபுரிமையாகவும் கணிப்பு பெறாதது,

(1) சீகிரியா, சிங்கராசவனம்
(2) தலதாமாளிகை, மகோபோதிவிருட்சம்
(3) படகமுவவனம், துன்ஹிந்த

(48) தேசப்படம் ஒன்றில் அதிவேகப்பாதை, புகையிரதப்பாதை, பெருந்தெரு ஆகியன காட்டப்பட்டுள்ள நிறங்கள் முறையே எவை?

(1) மஞ்சள், கறுப்பு, ஊதா (2) ஊதா, கறுப்பு, சிவப்பு (3) ஊதா, சிவப்பு, கறுப்பு

(49) தொடர்பாடலின் கூறுகளாக அமைவது,

(1) அனுப்புபவர், ஊடகம், பெறுநர்
(2) அனுப்புபவர், செய்தி, பெறுநர்
(3) அனுப்புபவர், கடிதத்தை பெறுபவர், கடிதம்



kalvi.lk


(50) பாதையில் நடந்து செல்லும் பாதசாரிகள் பாதையைக் கடப்பதற்கு முன் அவதானிக்க வேண்டிய பக்கங்கள் முறையே.
(1) வலது, இடது, வலது (2) இடது, வலது, இடது (3) இடது, வலது

(51) இலங்கைக்கே உரித்தான தாவரங்களாக அமையாதது.
(1) எண்ணை, ஹீன்போவிட்டியா (2) கெக்கட்டியா, கொடபறை (3) மாதுளை, தொம்மக் கொட்டை

(52) இலங்கை திருநாடு உலகுக்கு அளித்த பிரதானமான ஒரு தத்துவஞானியாக கருதப்படுபவர்.


(1)


(2)


(3)

(53) வெடித்தல் மூலம் பரவலடையும் வித்துக்களாக அமைவது,
(1) காசித்தும்பை, முதிர்ந்த வெண்டிக்காய்
(2) துத்திரிப்புல், ஆடையொட்டி
(3) எருக்கலை, சீதேவியார் செங்கழுநீர்

(54) முற்காலச் சேனைப் பயிர்ச் செய்கையில் விளைபொருட்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்ட காப்பு முறை.
(1) தீபக்குடிசை அமைத்தல். (2) புனித நீர் தெளித்தல். (3) வெளிவேலி கொய்தல்.

(55) இலங்கையின் தேசிய மலர், தேசிய விளையாட்டு என்பவற்றை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.
(1) அல்லி, கரப்பந்தாட்டம் (2) நீலோற்பலம், வொலிபோல் (3) நாகமரம், கபடி

(56) புரதச்சத்து அதிகமுள்ள உணவுக்கு உதாரணமாக இருப்பது,
(1) நிலக்கடலை (2) ஈரப்பலா (3) சோயா அவரை

(57) மருத்துவரினால் நோயாளிக்கு விதிக்கப்படும் மருந்தைப் பயன்படுத்தும் போது குறைந்த அளவு கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம்.
(1) மருந்தை உட்கொள்ள வேண்டிய ஊட்டு அளவு.
(2) மருந்து உட்கொள்ள வேண்டிய தடவைகள்.
(3) மருந்தை உற்பத்தி செய்த நாடு

(58) வீட்டுத்தோட்ட 3R எண்ணக்கருவில் உடன் உணவுகளை, சிற்றுண்டி வகைகளின் பயன்பாட்டைக் குறைத்தல் எந்த எண்ணக்கருவில் உள்ளடங்கும்.
(1) மீளப் பயன்படுத்தல் (2) பயன்பாட்டைக் குறைத்தல் (3) மீள் சுழற்சிப்படுத்தல்

(59) சீவுளி, மணியாசு, தீதாள் ஆகியவற்றை பயன்படுத்துவோரை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.
(1) மேசன், தச்சன், நெசவாளி (2) தச்சன், மேசன், தையல் (3) மீனவன், கொல்லன், அகழ்வுத் தொழில்

(60) 'நிலா உள்ள இரவு' எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.

(1) ..........................................................................................

..........................................................................................

(2) ..........................................................................................

..........................................................................................

(3) ..........................................................................................

..........................................................................................



kalvi.lk